**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(02.05.2018 முதல் 06.05.2018)**
**அறிக்கைஎண் 34/2018**
**தேதி:01.05.2018**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைஈரோடு (02.05.2018 முதல் 06.05.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ முதல் 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | மேகமூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின ் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02.05.18 | 10 | 38 | 26 | 4 | 70 | 50 | 14 | தென்மேற்கு |
| 03.05.18 | 15 | 38 | 26 | 4 | 70 | 50 | 14 | தென்மேற்கு |
| 04.05.18 | 10 | 38 | 26 | 4 | 70 | 50 | 14 | தென்மேற்கு |
| 05.05.18 | 18 | 39 | 26 | 3 | 80 | 50 | 8 | தென்மேற்கு |
| 06.05.18 | 20 | 39 | 26 | 3 | 80 | 50 | 8 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை வேர்பகுதிகளில் தேக்கும் வகையில் தென்னை மரங்களைச்சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுக்கவும்.
- ✓ இலேசான மழையை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ கம்பு பயிரை இறவை பயிராக பயிர் செய்ய இது உகந்த பருவம். மழையினால் கிடைக்கப்பெற்ற ஈரம் குறைவாக இருப்பின் விதைத்தவுடன் நீர்பாசனம் செய்யவும்.
- ✓ மஞ்சள் நடுவதற்கு வயல் தயார் செய்ய இதுவே உகந்த காலமாகும். எனவே விவசாயிகள் வயலை உழவு செய்து பண்படுத்தி வைக்கவும்.

**குறுஞ்செய்தி**

ஈரம் குறைவாக இருப்பின் விதைத்தவுடன் நீர்பாசனம் செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**